DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT, KALLAKURICHI

| **S.C.41/2025** | | | |
|---|---|---|---|
| **P. W:3** | | **LW:5** | |
| Name | முனியம்மாள் | Caste | |
| Husband Name | ஐய்யனார் | Religion | |
| Village | சிறுமங்கலம் | Age | |
| Taluk | | | |
| | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **24.06.2025.**

**எதிரிகள் ஆஜர். எதிரியின் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சிக்கு முறையாக அழைப்பாணையும் சார்வு செய்யப்பட்டுள்ளது. புகார்தாரர் சார்பில் கீழ்குப்பம் காவல் நிலைய தலைமைக்காவலர் திரு.சதீஷ்குமார் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சிறுமங்கலம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். இந்த வழக்கின் புகார்தாரர் பட்டியல் சாட்சி - 1 முருகையன் என்னுடைய மகன் இந்த வழக்கு சம்பவத்தால் பாதிக்கப்பட்டு தொடர் மருத்துவ சிகிச்சை பெற்று வந்து பலனில்லாமல் சென்ற வருடம் ஆவணி மாதம் இறந்துவிட்டார். இந்த சம்பவம் நடந்தது பங்குனி மாதம் 1ம் தேதி ஆகும். நானும், எனது கணவரும் சென்ற ஆண்டு பங்குனி மாதம் இரவு நேரத்தில் நான் வீட்டிலிருந்த போது எனது மகன் முருகையனுக்கும், ஆஜர் எதிரிகளுக்கும் சண்டை நடந்து எனது மகன் முருகையனை கத்தியால் குத்தி விட்டதாக எனது உறவினர் வந்து தகவல் சொன்னார். நான் பின்னர் மறுநாள் கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனைக்கு சென்று எனது மகன் முருகையனை பார்த்தேன். அவருக்கு கழுத்தில் காயம் இருந்தது.

இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை

இந்த சம்பவத்திற்கு பிறகு கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனையில் உள் நோயாளியாக சிகிச்சை பெற்று வந்த எனது மகன் 13 நாட்களுக்கு பிறகு மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ச் செய்யப்பட்டார். அதன் பிறகு என் மகன் பாண்டிச்சேரியில் மேல் சிகிச்சை பெற்ற விவரம் குறித்து நான் போலீசாரிடம் தெரிவிக்கவில்லை. என் மகன் அவனுடைய மனைவி மற்றும் பிள்ளைகளுடன் வாழாமல் தனியாக சமைத்து கொண்டு வசித்து வந்தார் என்றால் சரிதான்.

எனக்கும் எனது மகனுக்கும் எவ்வித சண்டையும், சச்சரவும் கிடையாது. எனது மகன் தாக்கப்பட்டது சம்பந்தமாக நான் வசித்து வந்த தெற்கு தெருவிற்கு எனது கணவரின் தம்பியின் மருமகன் மதி என்பவர் இரவு நேரத்தில் சுமார் 10 -11 மணியளவில் நேரில் வந்து தெரிவித்தார். மறுநாள் காலையில் நான் என் மகனை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது பார்த்தேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்ட தேதியில் நான் என் மகனை சந்திக்கவில்லை. எனக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட அன்று என்னுடைய கணவர் என்னுடன் தான் இருந்தார். இந்த வழக்கு சம்பந்தமாக என்னை போலீசார் விசாரிக்கவில்லை.

இதே குற்ற சம்பவம் தொடர்பாக எனது மகனின் மீது ஒரு குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டு பிறகு என் மகன் கைது செய்யப்பட்டார் என்றால் சரிதான். என் மகன் தொடர் சிகிச்சையின் பேரில் பலனின்றி இறந்துவிட்டார் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் மகனை போலீசார் கைது செய்துள்ள நிலையில், பிறகு உரிய மருத்துவ பரிசோதனை செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் அவருக்கு நான் தெரிவிப்பது போல தொடர் சிகிச்சை பலனின்றி அவர் இறக்க வில்லை என்றால் சரியல்ல.

இந்த வழக்கின் சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும், உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை . இல்லை</u>**

The evidence is taken before me and interpreted/read over to the witness in the open court and the same is admitted and signed by the witness.

sd/G.Jayavel
Chief Judicial Magistrate,
Kallakurichi.